1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம்நதி அரியலூர் பேரூராட்சியிலிருந்து சுமார் 27 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கொள்ளிடம் நதி நீர் உறுதியாகக் கிடைக்கக்கூடிய நிலையில் இருந்தாலும், இந்நதியில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அதிகம் செலவாகலா மெனக் கருதப்படுகிறது. ஆகவே இப்பேரூராட்சியின் சுற்றுப் புறங்களில் உள்ள நிலத்தடி நீரை ஆழ்துளைக் கிணறுகள் மூலம் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. நிலத்தடி நீர் ஆய்வுத் துறையினர் நொச்சிக்குளம் கிராமத்தில் அமைத்துள்ள ஆழ்துளைக் கிணறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவது, குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆய்வுக்கு பின்னர் அது அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

திருவெறும்பூர் ஊராட்சியில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

வின * 581 திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

அ) திருவெறும்பூர் ஊராட்சி அரிசன மக்களுக்கும்' நரிக்குறவர்களுக்கும் இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் உண்டா?

ஆ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது அமுல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவராய நேரியில் நரிக்குறவர்களுக்காக ஏற்கெனவே 1974-75-ம ஆண்டில் 140 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) அரிசன மக்களுக்குக் கட்டித்தருவது பற்றி அடுத்து வரும் கட்டங்களில் 1978-79 பரிசீலிக்கவேண்டும்.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவரவர்களே, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவராயநேரியில் நரிக்குறவர்களுக்காக ஏற்கெனவே 1974-75-ம் ஆண்டில் 140 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது மட்டுமல்ல, அங்கே ஒரு பள்ளிக்கூடமும், ஒரு பாலர் பள்ளியும், குடிநீர், வடிகால் வசதிகளும், வானெலி நிலையமும் டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அமைக்கப்பட்டன. அதேபோல், பழங்கனூங்குடியில் வாழும் நரிக்குறவர்கள் வெயிலிலும், மழையிலும் அல்லல்பட்டுக் கொண்டு இருப்பதால், அப்படிப்பட்ட திட்டங்களை அங்கே செயல்படுத்த அரசு முன்வருமா? அதே போல், அரிசனங்களுக்கு கலைஞர் ஆட்சியில் எங்கள் ஊரில் மற்ற சமுதாயத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன, அதேபோல் அரிசனங்களுக்கும் அங்கே வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உண்டா?

[1978 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தேவராயநேரியில் நரிக்குறவர்களுக்காகக் கட்டப்பட்ட இல்லத்திலேயே அவர்கள் தங்குவது இல்லை என்ற புகார் வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, இன்னும் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்து, அவர்கள் தங்காமல் இருந்தால், அரசாங்கப் பணம் வீணுகச் செலவழிப்பதாக இருக்கும். அது பொருத்தமாக இருக்காது. அரிசனங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

(சில உறுப்பினர்கள் துணை வினுக்கள் எழுப்ப, கைகளை உயர்த்திக் கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வினு திருவெறும்பூர் ஊராட்சி பற்றியது. அனுமதிப்பதற்கில்லை.

Thachoor Harijan Colony

* Q-582 Thiru J. JAMES: will the Hon. the Minister for Harijan welfare be pleased to state:

a) whether land has been acquired for the pathway leading to Thachoor Harijan colony in Thiruvettar Panchayat Union In Kanyakumari district

b) if so, whether the pathway way constructed, and

c) if not, the reasons for the delay ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) தச்சூர் அரிசனக் காலனிக்கு பாதை அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பாதை இன்னும் முழுவதுமாக அமைக்கப்படவில்லை.

(இ) நில எடுப்புச் சட்டம் பிரிவு 4 (1) -ன் படி முன்மொழிவு அறிவிக்கை வெளியிடப்பட்டபின், நிலச் சொந்தக்காரர்களில் ஒருவர் அவருடைய ஆர்ஜித நிலத்தில் ஒரு கட்டடத்தைக் கட்டி விட்டார். இந்தப் பகுதியைத்தவிர மற்ற நிலத்தில் பாதை அமைக்கப்பட்டு விட்டது, அந்த நிலத்தில் கட்டிய வீட்டை இடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனுல் அந்த நிலச் சொந்தக்காரரோ தானுக முன்வந்து 26. 12. 1977-ல் வீட்டை இடித்து விட்டு நிலத்தை அரசிடம் ஒப்படைத்து விட்டார். இந்த நிலததில் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.